**மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பட்டப்பின்படிப்பு நிறுவகம் - 2017**

---

பேராதனை பல்கலைக்கழகத்துடன் இணைந்த மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 சனவரி 03 ஆம் திகதிய 1843/45 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானிப் பத்திரத்தில் வெளியிடப்பட்ட 2013 இன் 02 ஆம் இலக்க மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பட்டப்பின்படிப்பு நிறுவக கட்டளைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவு மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) உப பிரிவு, 108 மற்றும் 111 பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(2) ஆம் உப பிரிவின் பிரகாரமான விபரமான அறிக்கையொன்று நிறுவனத்தின் பணிப்பாளருக்கு 2018 மே 09 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம்தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றன என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடைமுறைகள் கணக்காய்வில் உள்ளடங்கும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக் கூற்றுக்களின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பேராதனை பல்கலைக்கழகத்துடன் இணைந்த மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இனங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அரச வங்கியொன்றின் ஆரம்பித்திருந்த இரண்டு நிலையான வைப்புக்கள் தொடர்பாக மீளாய்வாண்டில் 30 நாட்களுக்கான பெற வேண்டிய வட்டி வருமானம் ரூபா 67,060 ஆல் குறைத்து கணக்கிடப்பட்டிருந்தது.

(ஆ) நிறுவகம் நிருவப்பட்டு இரண்டு ஆண்டுகள் விஞ்சியிருந்த போதிலும், நிறுவகம் தற்போது பயன்படுத்தப்படும் பேராதனை பல்கலைகழகத்திற்கு சொந்தமான 46 நிலையான சொத்துக்களை சட்ட ரீதியான உரிமையை சுவீகரித்து, மதிப்பிடப்பட்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 திசெம்பர் 31 இன் ஊழியர் பணிக்கொடை ஒதுக்கீடு ரூபா 100,000 ஆல் குறைத்து கணக்கிடப்பட்டிருந்தது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமை அவதானிக்கப்பட்டது.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1999 ஏப்ரல் 09 ஆம் திகதிய அமப/99/0438/11/033 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம். | பல்கலைக்கழக சேமலாப நிதியத்திற்கு நிறுவகம் மற்றும் ஊழியர்களால் செலவு வைக்கப்படும் 25 சதவீத பணத்தால் 10 சதவீதம் ஓய்வூதிய நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியுள்ளது. ஆயினும் அதற்கு முறனாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டிருந்த 1999 யூன் 10 ஆம் திகதிய இலக்கம் 747 கொண்ட சுற்றறிக்கை ஊடாக |

| | |
|---|---|
| | தொழில்தருனரால் சேமலாப நிதியத்திற்கு செலவு வைக்கப்படும் 15 சதவீத பங்களிப்பு பணத்தில் 8/15 அளவை ஓய்வூதிய நிதியத்திற்கு செலவு வைக்க ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. ஆதனால் 2 சதவீதம் அல்லது ரூபா 80,647 ஆன பணம் 2017 ஆண்டில் ஓய்வூதிய நிதியத்திற்கு குறைத்து செலவு வைக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக்கோவையின் II பகுதியின் VIII ஆம் அத்தியாயத்தின் 6.2 இன் (ii) மற்றும் (iii) ஆம் பிரிவுகள். | தமது கடமைகளுக்கு மேலதிகமாக ஏனைய சேவைகளிலிருந்து உழைக்கும் கட்டணங்களிலிருந்து 10 சதவீதம் தமக்கு உரிய உயர்கல்வி நிறுவனத்திற்கு செலுத்த வேண்டியுள்ளது. ஆயினும் மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பட்டப்பின்படிப்பு நிறுவகம் மீளாய்வாண்டினுள் செலுத்தப்பட்ட ரூபா 24,022,907 ஆன வெளிவாரி விரிவுரைக் கட்டணங்களிலிருந்து ரூபா 2,402,290 ஆன கட்டணம் செலுத்தப்படும் சந்தர்ப்பத்தில் கழித்து பல்கலைக்கழக நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 22,108,617ஆன மிகை ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் மிகை ரூபா 11,646,388 ஆனது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் நிதி விளைவுகளில் ரூபா 10,462,229 ஆன அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. மீண்டு வரும் மாணியம் ரூபா 14,700,000 ஆல் மற்றும் உள்ளக வருமானம் சம்பாதிப்பு ரூபா 14,019,860 இனால் அதிகரித்தமை பிரதானமான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு நிதி விளைவை பகுப்பாயும் போது 2 வருடங்களிலும் நிதி மிகையொன்று ஏற்பட்டிருந்தது. நிதி விளைவுக்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு சரிசெய்யப்பட்டதன் பின் 2016 அண்டின் ரூபா 45,666,589 ஆன நிறுவக பங்களிப்பு 2017 ஆண்டின் போது ரூபா 66,863,593 வரை அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2003 ஜுன் 02 திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 பிரிவின் பிரகாரம், கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் 5.2 பிரிவின் பிரகாரம், வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.1.2 செயலாற்றுகை மற்றும் மீளாய்வு

2016/2017 கல்வி ஆண்டிற்காக நிறுவனத்தினால் 803 மாணவர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன், 2017/2018 கல்வி ஆண்டிற்காக சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர் எண்ணிக்கை 467 வரை குறைந்திருந்தது.

### 4.2 முகாமைத்துவ செயலாற்றுகை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) தேவையை இனங்காணாது நிறுவகத்தினால் மாதாந்தம் குறைந்தபட்சம் 3000 கிலோ மீட்டர் தூரம் செலுத்தும் அடிப்படையில் மாதம் ரூபா 199,410 செலுத்துவதற்காக வாடகைக்கு வாகனமொன்றை பெற்றுக்கொள்ள 2017 ஏப்ரல் 01 திகதி உடன்படிக்கை கைச்சாதிடப்பட்டிருந்தது. அந்த வாகனம் 8 மாத காலத்திற்குள் மாதத்திற்கு செலுத்தப்பட்டிருந்த குறைந்தபட்ச தூரம் கிலோ மீட்டர் 904 மற்றும் உயர்ந்தபட்ச தூரம் கிலோ மீட்டர் 2092 ஆன விலகல் நிலவியது. அதனால் அதன் சராசரி செலவு கிலோ மீட்டருக்கு ரூபா 201 ஆன உயர் பெறுமானத்தில் நிலவியது. மேலும் செலுத்தலுக்கு பயன்படுத்தப்படாத 2017 ஏப்ரல் மாதத்திற்காக மாதாந்த வாடகைக்காக ரூபா 199,410 செலுத்தபபட்டிருந்தது.

(ஆ) 2015 ஆண்டிற்கு முன்னர் பேராதனை பல்கலைக்கழக கலை பீடத்திற்கு உரிய நிதிய கணக்கொன்றின் ஊடாக மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பட்டப்பின்படிப்பு பாடநெறி நடாத்திச்செல்லப்பட்டு வரவு செலவு கணக்குவைக்கப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 15 முதல் வேறான ஒரு நிறுவனமாக மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பட்டப்பின்படிப்பு நிறுவகம் நிறுவப்பட்ட பின்னர் அந் நிதிய கணக்கில் நிலவிய ரூபா 13,231,258 ஆன மீதியை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 பதவியணியினர் நிர்வாகம்

நிறுவகத்தின் பதவி அணியில் ஓர் நிரந்தர வேலை உத்தியோகத்தர் மற்றும் ஓர் முகாமை உதவியாளர் பதவி வெற்றிடம் காணப்பட்டதனால் நிறுவகத்தின் செயல் நடவடிக்கையை உச்ச வகையில் மேற்கொள்வதற்கு தடையாக இருந்தது.

## 5. நிலையான அபிவிருத்தி

### 5.1 நிலையான அபிவிருத்தி நோக்கினை அடைந்து கொள்ளல்

2017 நிலையான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு ''நிகழ்ச்சிநிரல்'' பிரகாரம் ஒவ்வொரு அரச நிறுவனங்களினாலும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதுடன், மீளாய்வாண்டு தொடர்பாக மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பட்டப்பின்படிப்பு நிறுவகம் தமது செயற்பரப்பின் கீழான செயல்கள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டும் என அறிந்திருக்கவிலை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 உள்ளகக் கணக்காய்வு

2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 09 பந்தி பிரகாரம், ஒவ்வொறு உள்ளக கணக்காய்வு அலகுகளால் தமது நிறுவனத்திற்காக காலாண்டிற்கு ஒரு முறை உள்ளக கணக்காய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டு கணக்காய்வு மற்றும் முகாமை குழு ஒன்றுகூடலிற்கு முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.2 கணக்காய்வுக் குழு

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் குறைந்தப்பட்சம் 03 மாதத்துக்கு ஒரு முறையாவது கணக்காய்வு குழு கூட்டம் நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிக்கான கணக்காய்வுக் குழு ஒன்றுக்கூடல் 02 மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது.

### 6.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட வருமானத்தையும் மற்றும் செலவினத்தையும், உள்ளபடியான வருமானத்துடனும் செலவினத்துடனும் ஒப்பீடு செய்த போது 18 விடயங்களில் 20 சதவீதம் தொடக்கம் 164 சதவீதம் வரையிலான விலகல்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத்துறைகள் | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) கணக்கீடு | - சொத்துக்கள் முறையாக சுவீகரிக்கப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை.<br>- 4 வருமான விடயங்களுக்காக 2016 ஆண்டின் பாதீடு செய்யப்பட்ட தகவல் முன்வைக்கப்படல். |
| (ஆ) ஒப்பந்த கட்டுப்பாடு | நிர்மாண ஒப்பந்தங்கள் தொடர்பில் நிலவும் நீதி ஒழுங்குகளுக்கு இணங்காமை. |